




# அயோத்திதாசர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்!

## திராவிட மாடல் அரசு

106

**ர.பிரகாசு**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

இந்தியத் துணைக்கண்டத்தில் மனிதர்களை மனிதர்களாகப் பார்க்காமல், சாதியாலும் மதத்தாலும் அடையாளங்கொள்ளும் மூடத்தனத்திற்கு எதிராக, பெரியாருக்கு முன்பே குரல் எழுப்பிய கலகக்காரர் அயோத்திதாசப் பண்டிதர். ஆரியப் பண்பாட்டுக்கு எதிரான அடையாளக் குறியீடாக திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தியதிலும் பெரியாருக்கு முன்னோடி அவர். அதனால்தான் தனது பகுத்தறிவுப் பரப்புரைக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்குமான முன்னோடியாக அயோத்திதாசப் பண்டிதரைக் கூறினார் பெரியார்.

அத்தகைய மானுடவியல் சிந்தனையாளருக்கு பெருமை சேர்க்கும் விதமாக இரண்டு முக்கிய பணிகளைச் செய்திருக்கிறது திராவிட மாடல் அரசு. ஒன்று, அயோத்திதாசர் பெயரில் தலைநகர் சென்னையில் மணிமண்டபம் எழுப்பியது. கிண்டி காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த மண்டபம், அறிவொளி இல்லமாக எழுப்பப்பட்டுள்ளது. மற்றொரு பணி, அவர் பெயரில் ‘அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்’ என்ற மாபெரும் திட்டத்தை உருவாக்கியது.

### திட்டத்தின் நோக்கம்!

திராவிட மாடலின் ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்பது, ‘இருப்பதை எல்லோருக்கும் பிரித்துக் கொடுப்பது அல்ல. இல்லாதவர்களுக்கு இல்லாததைச் செய்வதும், அதன்மூலம் இல்லாதவர்களையும் இருப்போரையும் சமன்படுத்துவதும்’ ஆகும். சமூகத்தின் உயரடுக்கில் இருப்போரையும், தாழ்த்தப்பட்டு வைக்கப்பட்டோரையும் சமன்படுத்துவது ஆகும்.

அத்தகைய சமத்துவ முயற்சியாக, பட்டியல் மற்றும் பழங்குடிச் சமூக மாணவர்களுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை இலவசம், பெண் கல்விக்கான ஊக்கத்தொகை, மதிப்பெண் அடிப்படையில் ஆயிரம் மாணவர்களுக்குப் பரிசுத்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா, தீண்டாமையைக் கடைப்பிடிக்காத கிராமங்களுக்குப் பரிசுத்திட்டம், ஜாதி- வேறுபாடற்ற கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிக்க ஊக்கத்தொகை, சிறந்த எழுத்தாளர்களுக்கான உதவித்தொகை, அம்பேத்கர் தொழில் முன்னோடித் திட்டம் என எண்ணற்ற திட்டங்களைப் பட்டியல் மற்றும் பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்காகவும், சமூக சமத்துவத்திற்காகவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வரிசையில் தாழ்த்தப்பட்டோரின் வாழ்விடப் பகுதியை தனிக்கவனம் செலுத்தி மேம்படுத்த திராவிட மாடல் அரசு உருவாக்கிய திட்டமே, ‘அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்’. தமிழ்நாடு சட்டப் பேரவையில், 2023-2024-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் இத்திட்டத்திற்கான அறிவிப்பு முதலில் வெளியானது.

அதன்படி நகர்ப்புறப் பகுதிகளிலும் ஊரகப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை உறுதி செய்து. முழுமையான சமூக, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் இலக்கு. ஆயிரம் கோடி ரூபாயில் 5 ஆண்டுகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், ஆண்டுக்கு தலா ரூ.200 கோடி செலவிடப்படும் என்றும் அப்போது அறிவிக்கப்பட்டது.

> 2023-24 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப் பட்ட பணிகள் மொத்தம் 1,688. அதில் 92% பணிகள் நிறைவடைந்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.
>
> 2024-25 ஆம் நிதியாண்டில் 1,966 பணிகள் தேர்வு செய்யப்பட்டு 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் வாழும் மக்களின் கண்ணியத்தைக் காப்பதும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதும் அரசின் அடிப்படைக் கடமை.**



அதிலும் வன்கொடுமை நிகழும் கிராமங்கள் என காவல்துறையால் கண்டறியப்பட்ட கிராமங்களுக்கு இத்திட்டத்தில் கூடுதல் முன்னுரிமை அளிக்கப்பட்டு, அத்தகைய கிராமங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல வடிகால், குடிநீர், தெரு விளக்குகள், சாலைகள், மயானப் பாதை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.



### நிதி ஒதுக்கீடும் செயல்பாடும்!

இதன்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 02.09.2023 அன்று, 2023-24ஆம் நிதியாண்டுக்கு 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது. இதில் ஊரக வளர்ச்சித்துறைக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,325 பணிகளும், பேரூராட்சி இயக்கத்திற்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 336 பணிகளும், தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 32 திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. 2024-25 ஆம் நிதியாண்டிற்கு ரூ.200 கோடி என்பதை ரூ.230 கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதில் ரூ.100 கோடியில் தமிழ்நாடு முழுவதும் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் 120 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சுத்தமான குடிநீர், சீரான சாலை, சுகாதாரமான குடியிருப்பு, கண்ணிய மான வாழ்க்கை என ஆதிதிராவிடர் குடி யிருப்புகளின் அல்லல்களை ஒவ்வொன்றாகக் களைந்து வருகிறது அயோத்திதாசர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்.

தாழ்த்தப்பட்டவர்கள் தனியாகவும், மற்றவர்கள் ஒன்றாகவும் வாழ்கிற சூழல் ஒழிக்கப்பட்டு, அனைவரும் ஒருசேர வாழ வேண்டுமென்பதே திராவிட வியல் தத்துவம். “சிறிய இடம் என்றாலும் ஊருக்குள் அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டி ஆதிதிராவிடர்களை வாழச் செய்ய வேண்டும், தனிக்கிணறு கூடாது; பொதுக்கிணறுதான் வேண்டும்” என்று பெரியார் முழங்கியதும், அனைத்துத் தரப்பைச் சேர்ந்தவரையும் ஒருசேர வாழச் செய்வதற்கான முன்மாதிரியாக சமத்துவபுரத்தை முத்தமிழறிஞர் நிறுவியதும் அதற்காகவே.

அந்த சமத்துவம் மலரும் நாளே இலக்கு என்றாலும், அதுவரை ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் வாழும் மக்களின் கண்ணியத்தைக் காப்பதும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதும் அரசின் அடிப்படைக் கடமை. அந்தப் பணியை பண்டிதர் அயோத்திதாசரின் பெயரால் அர்ப்பணிப்போடு செய்துகொண்டிருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’.

**...சாதனை தொடரும்**

## மீண்டும் வெளியானது ‘திராவிட வாசிப்பு’




திராவிட இயக்கத்தின் மீதான அவதூறுகளை முறியடிக்கவும், நூறாண்டு கால வரலாறு, சாதனைகளைப் பேசவும் ‘திராவிட வாசிப்பு’ என்ற மின்னிதழ் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியாகி வந்தது. திராவிட இயக்க அறிஞர்கள், சமூக வலைத்தளங்களில் திராவிடம் சார்ந்து எழுதிய இளம் எழுத் தாளர்கள் என பலரும் எழுதிய இக்கட்டுரைகள் பெரும் வர வேற்பைப் பெற்றன. திராவிட இயக்க உணர்வுகொண்ட இளைஞர்கள் குழுவால் நடத்தப்பட்டு வந்த இந்த இதழ், 2023 டிசம்பருக்குப் பிறகு வெளியாகாமல் இருந்தது. ஆனால் அதுவரை வந்த கட்டுரைகளின் தொகுப்பானது ‘இளைய தலைமுறையின் புதிய திராவிடம்’ என்ற பெயரில் நூலாகவும் வெளியானது.

அந்நூலுக்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது. இந்நிலையில் ‘திராவிட வாசிப்பு’ மின்னூலை 21 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் வெளியிட்டுள்ளனர். ‘பெரியார் என்னும் பெரு நெருப்பு’ என்னும் பெயரில் ஜனவரி மாத மின்னூல் வெளியாகியிருக்கிறது. சுந்தர் பார்த்தசாரதி, மு.சீதாரமன், ஹாஜாபின்பாவா, பரத் டோனி, வெற்றிச்செல்வன் மாணிக்கம், ராஜராஜன் ஆகியோரின் கட்டுரைகள் இம்மாத இதழில் வெளியாகியுள்ளன.

இந்த மின்னூலை https://blog.dravidiansearch.com/ என்ற வலைப்பக்கத்திலும், அமேசான் கிண்டிலிலும் வாசிக்கலாம். dravidavaasippu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது படைப்புகள் மற்றும் விமர்சனங்களை அனுப்பலாம் என திராவிட வாசிப்பு மின்னூல் ஆசிரியர் குழு அறிவித்துள்ளது.

திராவிட வாசிப்பை வளர்க்கட்டும் ‘திராவிட வாசிப்பு’

## :.ப்ளாஷ்பேக்



### என்றென்றும் கழக உறுதியுடன்...



வழக்கறிஞர் கோ.புகழரசு

முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் கழகத்தின் மீது தீவிர பற்று கொண்ட நான், 2007-ஆம் ஆண்டு முதல் கழகத்தில் என்னை இணைத்துக் கொண்டு பணியாற்றி வருகிறேன். 2011-ஆம் ஆண்டு, அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய நமது முதலமைச்சர் அவர்களை ஆழ்வார்பேட்டை சித்தரஞ்சன் சாலையில் உள்ள இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். தலைவர் கலைஞர் அவர்களிடம் கொண்டிருந்த பற்றும், உறுதியும் இன்று தளபதி அவர்களிடமும் தொடர்கிறது.

**– வழக்கறிஞர் கோ.புகழரசு,**
**காட்டுப்பரூர், விருத்தாசலம் வட்டம்,**
**கடலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### ஐம்பெரும் முழக்கமும்–மாநில உரிமைக்குரலும்!

1970-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதத்தில் திருச்சியில் கழகத்தின் மாநாடு நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா இல்லாமல் நடைபெற்ற முதல் மாநாடு அதுதான். அந்த மாநாட்டில்தான் கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டார் கலைஞர். அந்த மாநாட்டுக்கு, அப்போது பஞ்சாப் முதலமைச்சராக இருந்த குர்னாம்சிங் வருகை தந்து சிறப்பித்து, மாநில உரிமைகளை நிலைநாட்டுவது குறித்து உரையாற்றினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

738

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.